**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C No. 50/2021** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of witness for | Prosecution : | **PW - 6** | |
| | Defence : | | |
| | Court : | | |
| Name | : | சரவணன் | |
| Father / Husband Name | : | ராஜாராம் | |
| Village | : | ஆட்டுக்கார தெரு, மானம்புசாவடி | |
| Taluk | : | தஞ்சாவூர். | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | இசைக் கலைஞர். | |
| Age | : | 45/2021 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.11.2021**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3,**
**திரு எம். செழியன்**, தட்டச்சர்

<u>**C.C No. 50/2021** **D**ate: 22.11.2021</u>

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து புல்லாங்குழல் வாசிக்கும் இசைக் கலைஞராக இருந்து வருகின்றேன். அ.சா.1 சுபாஷினி என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. கடந்த 25.01..2021 அன்று காலை 7.00 மணியளவில் ஜெயபால் மளிகை கடை அருகே நானும் என் நண்பர் குமாரும் நின்று பேசிக்கொண்டு இருந்தபோது அந்த இடத்தில் நகை திருட்டு போனது சம்மந்தமாக கேள்விப்பட்டோம். கிழக்கு காவல் நிலைய போலீசார் அந்த இடத்தில் வந்து விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் குமார் என்பவர்

கையெழுத்து செய்துள்ளார். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். புகார் கொடுத்த சுபாஷினியும் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் புகார் கொடுக்கச் சென்ற விபரம் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் வந்து விசாரித்து சென்றார்கள் என நான் கேள்விபட்டேன். எந்த போலீசார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசாரிடம் கையெழுத்து போட்டு கொடுத்ததாக நான் குறிப்பிட்டுள்ளதை நான் காவல் நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டதற்காக அ.சா.1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)